நல்லூர் -01-1373 S.Alakesh

# நல்லூர், யாழ்ப்பாணக் கல்விக்கோட்டம்
## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2015 1373

| தரம் : 11 | வரலாறு<br>பெயர் / சுட்டெண் : ................................................ | நேரம் :<br>3.00 மணித்தியாலம் |
|---|---|---|

பகுதி - II

**பகுதி I இல் முதலாம் வினா கட்டாயமானது. பகுதி II இல் இருந்து மூன்று வினாக்களிற்கும், பகுதி III இல் இருந்து இரண்டு வினாக்களிற்குமாக எல்லாமாக ஆறு வினாக்களிற்கு விடை எழுதுக.**

பகுதி -I

1. அ) கீழே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்றிடங்களைத் தரப்பட்டுள்ள இலங்கைப்படத்திலும், (ii) இல் குறிப்பிடப் பட்டுள்ள வரலாற்றிடங்களைத் தரப்பட்டுள்ள உலகப்படத்திலும் குறித்துப் பெயரிடுக.

i) பராக்கிரம சமுத்திரம், களனி கங்கை, அனுராதபுரம், பதுளை, ஊராத்தோட்டை, புத்தளம், மகியங்கனை, நல்லூர், கன்னொருவ, தந்திரிமலை (10 புள்ளிகள்)

ii) காவேரி ஆறு, சுமாத்திராதீவு, டோக்கியோ, காபூல், கொன்ஸ்தாந்திநோபிள், மக்கா, லிஸ்பன், நேபாளம் (08 புள்ளிகள்)

ஆ) i) கீழே A B C D எனக் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களுடன் தொடர்புடைய நபர்களை அதே ஒழுங்கில் தருக.

A. 1915 இல் நடைபெற்ற சிங்கள முஸ்லிம் கலகத்தின்போது வழக்கு விசாரணையின்றிச் சிறையில் அடைக்கப்பட்ட தலைவர்களை விடுவிப்பதற்கு அளப்பெரிய சேவை ஆற்றியவர்.

B. கி.பி. 5 ஆம் நூற்றாண்டில் இலங்கைக்கு வந்து அபயகிரி விகாரையில் இரு ஆண்டுகள் தங்கியிருந்து இலங்கை பற்றிய தகவல்களை உள்ளடக்கிய நூலை எழுதிய சீனப்பிக்கு

C. இலங்கையில் துறவறம் மேற்கொண்ட முதல் அரச குடும்பப் பெண்மணி.

D. தக்கிண தேசத்தைப் பரிபாலனம் செய்தபோது, பண்டுவாவியை விசாலமாக்கி அதனைச் சூழ்ந்த பகுதியை அபிவிருத்தி செய்தவர்.



ii) 1) அருகிலுள்ள இலச்சினையைப் பெயரிடுக.

2) இவ்விலட்சினையுடன் தொடர்புபட்ட மன்னர் யார்? (04 புள்ளிகள்)

3) இத்தூணின் உச்சியில் செதுக்கப்பட்டுள்ள மிருகங்களுள் ஒன்றின் பெயரைத் தருக.

4) இவ் இலச்சினையின் இன்றைய முக்கியத்துவம் யாது? (04 புள்ளிகள்)



iii) 1) அருகிலுள்ள படத்தில் காணப்படும் அறிஞரின் பெயர் யாது?

2) இவர் தனது பங்களிப்பை அதிகமாக வழங்கிய துறை எது?

3) இவரது பிரபல்யமான கலைப்படைப்பு ஒன்று தருக.

4) இவரது தாய்நாடு எது?

(04 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி - II

02\. i) வரலாற்றுக்கு முந்திய காலத்தில் வாழ்ந்த மனிதன் பின்பற்றிய இறுதிக்கிரியைப் பழக்க வழக்கங்கள் பற்றிய தகவல்களை வெளிப்படுத்தும் 3 குகைகளின் பெயர்களைத் தருக. (03 புள்ளிகள்)

ii) பின்வரும் ஆரியக் குடியிருப்புக்கள் அமைந்த நதிப்பள்ளத்தாக்குகளை A, B, C, D என்ற ஒழுங்குமுறையில் தருக.
A. அனுராதகம  B. தீகவாபி  C. உருவெலகம  D. மகாகாமம்
(04 புள்ளிகள்)

iii) பண்டுகாபய மன்னனின் ஆட்சி முக்கியத்துவத்தை 2 காரணிகளை அடிப்படையாகக் கொண்டு விளக்குக. (05 புள்ளிகள்)

iv) நீரை வள நாகரிக காலத்தில் இலங்கையில் வளர்ச்சியடைந்த நீர்ப்பாசன தொழில்நுட்பவியல் இருந்தமையை 3 விடயங்களைத் தந்து விளக்குக. (06 புள்ளிகள்)

03\. i) கீழே தரப்பட்டுள்ளவர்களில் இருந்து அனுராதபுரத்தை ஆட்சி செய்த 3 மன்னர்களைத் தருக.
(காவந்தீசன், தேவநம்பியதீசன், எல்லாளன், 1ம் பராக்கிரமபாகு, நிஸ்ஸங்கமல்லன், 5 ஆம் மகிந்தன்) (03 புள்ளிகள்)

ii) A, B, C, D எனத் தரப்பட்டுள்ள சம்பவங்களுடன் தொடர்புபட்ட மன்னர்களைத் தருக.
A. மௌரியப் பேரரசின் அனுசரணையுடன் முடிசூட்டலை நடத்திய மன்னன் யார்?
B. பூலகந்தன் உட்பட 7 தென்னிந்திய படையெடுப்பாளர்கள் இலங்கைக்கு வந்தபோது, அனுராதபுர ஆட்சியாளராக இருந்தவர்.
C. ரூவான்வெலிசாய, மிரிசவட்டி ஆகிய தூபிகளைக் கட்டிய மன்னன்.
D. கலாவாவியை அமைத்தவன் (04 புள்ளிகள்)

iii) வலகம்பா அரசனின் ஆட்சிக்காலம் சமயரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த காலமாகும். 2 உதாரணம் தந்து விளக்குக. (05 புள்ளிகள்)

iv) இராசரட்டையில் நீர்வள நாகரிகம் வீழ்ச்சியடைவதில் செல்வாக்குச் செலுத்திய 3 காரணிகள் தந்து விளக்குக. (06 புள்ளிகள்)

04\. i) போர்த்துக்கேயர் வருகை தந்தபோது, இலங்கையில் இருந்த இராச்சியங்கள் மூன்றினைப் பெயரிடுக. (03 புள்ளிகள்)

ii) பின்வரும் நிகழ்வுகளுடன் தொடர்புடையவர்களை A, B, C, D என்ற ஒழுங்கில் தருக.
A. இலங்கைக்கு வந்த முதல் போர்த்துக்கேயர்.
B. முல்லேரியாப் போரில் போர்த்துக்கேயரைத் தோற்கடித்தவர்.
C. 1638 இல் ஒல்லாந்தருடன் ஒப்பந்தம் செய்தவர்.
D. இரண்டாம் இராஜசிங்க மன்னன் காலத்தில் கண்டியில் கைதியாக இருந்து பின்னர் இலங்கை பற்றிய நூலை எழுதிய ஆங்கிலேயர். (04 புள்ளிகள்)

iii) கோட்டை இராச்சியம் போர்த்துக்கேயர் வசமாவதற்கு அடிப்படையாக அமைந்த இரு காரணிகளைத் தந்து விளக்குக. (05 புள்ளிகள்)

iv) போர்த்துக்கேயராலும், ஒல்லாந்தராலும் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்ற முடியாமற் போனமைக்கான காரணங்கள் மூன்று தந்து விளக்குக. (06 புள்ளிகள்)

05\. i) இந்துசமுத்திரத்தைச் சார்ந்துள்ள நாடுகளுடன் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்ட 3 ஐரோப்பிய நாடுகளைத் தருக. (03 புள்ளிகள்)

ii) பின்வரும் நிகழ்வுகளுடன் தொடர்புபட்டவர்களை A, B, C, D என்ற ஒழுங்கில் தருக.
A. 1815 இல் கண்டி கைப்பற்றிய பின்னர் அதன் ஆட்சிக்காக நியமிக்கப்பட்ட பிரித்தானிய வதிவிடப் பிரதிநிதி.
B. அரசுரிமையை உறுதிப்படுத்துவதற்காக முதலாம் விமலதர்மசூரியன் திருமணம் செய்த அரசகுமாரி.
C. சீதாவாக்கை மாயாதுன்னைக்கு கடற்படை உதவி வழங்கிய கள்ளிக்கோட்டை அரசன்.
D. கி.பி. 1762 இல் ஜோன் பைப்பஸ் என்ற ஆங்கிலேயர் தூதுப்பணிக்காக இலங்கைக்கு வந்தபோது, கண்டியில் ஆட்சி செய்த அரசர். (04 புள்ளிகள்)



kalvi.lk

iii) முதலாம் விமலதர்மசூரியனின் சமய, அரசியல் சேவைகளை ஒவ்வோர் உதாரணம் தந்து விளக்குக. (05 புள்ளிகள்)

iv) ஒல்லாந்தர் கண்டி அரசர்களுடன் நல்லுறவுடன் செயற்படுவதற்கு சில உத்திகளைப் பின்பற்றினர். 3 உதாரணம் தந்து விளக்குக. (06 புள்ளிகள்)

06. i) பின்வரும் சீர்திருத்தங்கள் நடைமுறைப்படுத்தப்பட்ட அரசியல் யாப்புகளைக் குறிப்பிடுக.

A. வரையறுக்கப்பட்ட வாக்குரிமை

B. நிர்வாகக் குழுமுறை ஆரம்பிக்கப்பட்டமை

C. இரு சபை கொண்ட பாராளுமன்றம் உருவாக்கப்பட்டமை

(03 புள்ளிகள்)

ii) கீழே A B C D ஆகியவற்றில் தரப்பட்டுள்ள விடயங்களுடன் தொடர்புபட்டவர்கள்

A. கலாவாவியைப் புனரமைத்த ஆளுநர்.

B. பிரம்மஞான சங்கம் என்னும் பௌத்த தாபனத்தை உருவாக்கியவர்.

C. முஸ்லீம் மக்களின் கல்வி மேம்பாட்டிற்காக மருதானையில் சாகிராக் கல்லூரியை ஆரம்பித்தவர்.

D. இலங்கையின் முதலாவது நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி.

(04 புள்ளிகள்)

iii) 1848 சுதந்திரப் போராட்டத்திற்கான காரணங்கள் இரண்டு குறிப்பிட்டு விளக்குக. (05 புள்ளிகள்)

iv) டொனமூர் அரசியல் யாப்புச் சீர்திருத்த அம்சங்களில் மூன்று தந்து விளக்குக. ( 06 புள்ளிகள்)

## பகுதி - III

07. i) A. இந்தியாவிற்குப் புலம்பெயர்ந்த ஆரியர்களின் தாயகமாகக் கருதப்படும் பிரதேசம்.

B. 16 பெரும் குடியிருப்புக்கள் பெரும்பாலும் பரம்பியிருந்த பிரதான ஆற்றுப்பள்ளத்தாக்கு.

C. ஆரியக் குடியிருப்புகள் தென்னிந்தியா நோக்கி விரிவடைந்த போது, தடையாக இருந்த மலைத்தொடர்.

(03 புள்ளிகள்)

மேலே குறிப்பிட்ட A, B, C ஆகியவற்றிற்கான விடையைக் கீழே உள்ள பட்டியலில் இருந்து தெரிவு செய்து அதே ஒழுங்கில் தருக.

(பமீர், இந்துக்குஷ், விந்தியம், சிந்து, கங்கை, ஸ்ரெப்பீஸ் புல்வெளி)

Education கல்வி අධ්‍යාපන

ii) A, B, C, D எனக் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களிற்குப் பொருத்தமான விடையை அதே ஒழுங்கில் தருக.

A. இந்தியா மீது படையெடுத்த முதல் கிரேக்க மன்னன்.

B. 3 ஆம் பௌத்த மகாநாட்டிற்கு ஆதரவு வழங்கிய மன்னன்.

C. ஆரியர் இந்தியாவிற்கு வந்தபோது, அங்கு நிலவிய நாகரிகம்.

D. பாடலிபுரத்தை மகதத்தின் தலைநகராகத் தெரிவு செய்தவன்.

(04 புள்ளிகள்)

iii) அசோகச் சக்கரவர்த்தியின் இரு பணிகளைக் குறிப்பிட்டு விளக்குக. (05 புள்ளிகள்)

iv) அசோகப் பேரரசின் பின் மௌரியப் பேரரசு வீழ்ச்சியடைந்தமைக்கான காரணங்கள் 3 தந்து விளக்குக. (06 புள்ளிகள்)

08. i) இந்தியத் தேசிய காங்கிரசிற்குத் தலைமை தாங்கிய மூவரைத் தருக. (03 புள்ளிகள்)

ii) 1857 சிப்பாய் கலகத்திற்குக் காரணமான இரு விடயங்களைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

iii) இந்திய சுதந்திரப் போராட்டத்தின் உயிர்ப்பான தலைவரான மகாத்மா காந்தியின் சுதந்திரப் போராட்ட வடிவங்களை இரு காரணிகளின் அடிப்படையில் விளக்குக. (05 புள்ளிகள்)

iv) பிரித்தானியர் இந்தியாவில் கடைப்பிடித்த கொள்கை இந்தியர்களிடையே தேசியவாதம் வளர்ச்சியடைவதற்கு வழி வகுத்தமையை 3 உதாரணம் தந்து விளக்குக. (06 புள்ளிகள்)



kalvi.lk

09. i) இங்கிலாந்தில் ஆரம்பமான கைத்தொழில் புரட்சி தொடர்ந்து பரவிய ஏனைய நாடுகள் 3 தருக. (03 புள்ளிகள்)

ii) கைத்தொழில் புரட்சியின் போது, உற்பத்தி செய்யப்பட்ட புதிய ஆக்கங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன. அவற்றைக் கண்டுபிடித்தவர்கள் யாவர்?

A. நூனாழி (பறக்கும் தழி)
B. மோட்டார் வண்டி
C. தொலைபேசி
D. வானொலிப்பெட்டி

(04 புள்ளிகள்)

iii) கைத்தொழில் புரட்சியின் சாதக, பாதக விளைவுகள் ஒவ்வொன்று தந்து விளக்குக. (05 புள்ளிகள்)

iv) கைத்தொழில் புரட்சி முதலில் இங்கிலாந்தில் ஏற்படுவதற்குப் பின்னணியாக அமைந்த காரணிகள் 3 தந்து விளக்குக. (06 புள்ளிகள்)

10. i) முதலாம் உலகப்போரில் நட்பு அணியைப் பிரதிநிதித்துவப்படுத்திய மூன்று முக்கிய நாடுகளைத் தருக. (03 புள்ளிகள்)

ii) A. முதலாம் உலகப் போரிற்குப் பின்னர் உலக சமாதானத்திற்காக அமைக்கப்பட்ட அமையம்.
B. முதலாம் உலகயுத்தத்தில் அமெரிக்கா ஈடுபடுவதற்கு காரணமாக அமைந்த தாக்குதலுக்குள்ளான கப்பல்.
C. இரண்டாம் உலகப் போரில் பாதிக்கப்பட்ட நாடுகளின் மீட்சிக்கு அமெரிக்காவால் அறிமுகப்படுத்தப்பட்ட திட்டம்.
D. இரண்டாம் உலகப்போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட ஜப்பானின் பேரரசன்.

(04 புள்ளிகள்)

iii) உலக சமாதானத்தை ஏற்படுத்தும் நோக்குடன் அமைக்கப்பட்ட சர்வதேச சங்கம் தோல்வியடைந்தமைக்கான காரணங்கள் இரண்டு தந்து விளக்குக. (05 புள்ளிகள்)


iv) இரண்டாம் உலகப்போரின் பின்னர் உலகில் அரசியல் ரீதியாக ஏற்பட்ட 3 மாற்றங்களைக் குறிப்பிட்டு விளக்குக. (06 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

நிலவுரு -01-1343



Education கல்வி අධ්‍යාපන

